# பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

# பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

| வரிசை எண் | நூல் பெயர் | பாடல் எண்ணிக்கை | பொருள் | ஆசிரியர் |
|---|---|---|---|---|
| 1 | நாலடியார் | 400 | அறம்/நீதி | சமண முனிவர்கள் |
| 2 | நான்மணிக்கடிகை | 101 | அறம்/நீதி | விளம்பி நாகனார் |
| 3 | இன்னா நாற்பது | 40+1 | அறம்/நீதி | கபிலர் |
| 4 | இனியவை நாற்பது | 40+1 | அறம்/நீதி | பூதஞ்சேந்தனார் |
| 5 | திரிகடுகம் | 100 | அறம்/நீதி | நல்லாதனார் |
| 6 | ஏலாதி | 80 | அறம்/நீதி | கணிமேதாவியார் |
| 7 | முதுமொழிக் காஞ்சி | 10×10 | அறம்/நீதி | கூடலூர்க்கிழார் |
| 8 | திருக்குறள் | 1330 | அறம்/நீதி | திருவள்ளுவர் |
| 9 | ஆசாரக்கோவை | 100+1 | அறம்/நீதி | பெருவாயின் முள்ளிய |
| 10 | பழமொழி | 400 | அறம்/நீதி | முன்றுரை அரையனா |
| 11 | சிறுபஞ்சமூலம் | 104 | அறம்/நீதி | காரியாசான் |
| 12 | ஐந்திணை ஐம்பது | 50 | அகம் | பொறையனார் |
| 13 | ஐந்திணை எழுபது | 70 | அகம் | மூவாதியார் |
| 14 | திணைமொழி ஐம்பது | 50 | அகம் | கண்ணஞ் சேந்தனார் |
| 15 | திணைமாலை நூற்றைம்பது | 150 | அகம் | கணிமேதாவியார் |
| 16 | கைந்நிலை | 60 | அகம் | புல்லங்காடனார் |
| 17 | கார் நாற்பது | 40 | அகம் | கண்ணங்கூத்தனார் |
| 18 | களவழி நாற்பது | 40+1 | புறம் | பொய்கையார் |

# நாலடியார்

- நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கு நூல் தொகுப்பைச் சேர்ந்த ஒரு தமிழ் நீதி நூல்.
- இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது.
- இது சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. இதனால் இது நாலடி நானூறு எனவும் பெயர் பெறும். 'வேளாண் வேதம்' என்ற பெயரும் உண்டு.
- தமிழ் நீதிநூலான திருக்குறளுக்கு இணையாகப் பேசப்படும் சிறப்பைப் பெற்றுள்ளது.
- ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் பழமொழியில் நாலு என்பது நாலடியாரையும், இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும்.

# நான்மணிக்கடிகை

**நூல் அமைப்பு**

- ஆசிரியர் = விளம்பி நாகனார்
- ஊர் =விளம்பி
- பாடல்கள் = 2 + 104
- பாவகை = வெண்பா

**வேறு பெயர்**

- துண்டு

**நான்மணிக்கடிகை பெயர்க்காரணம்**

- நான்கு + மணி + கடிகை = நான்மணிக்கடிகை
- கடிகை = துண்டு, ஆபரணம், தோள்வளை.
- நான்கு மணிகள் பதிக்கப் பெற்ற தோள்வளை போல் நான்கு நீதி மணிகளால் நிலைநாடாப்பட்ட பாடல்களைக் கொண்ட நூல்.

## நான்மணிக்கடிகை

மனைக்கு விளக்கம் மடவார்; மடவார்
தனக்குத் தகைசால் புதல்வர்; – மனக்கினிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்
ஓதின் புகழ்சால் உணர்வு.

– விளம்பிநாகனார்

### பாடல்பொருள்

குடும்பத்தின் விளக்குப் பெண்ணாவாள். அப்பெண்ணுக்கு விளக்கினைப் போன்றவர்கள், அவள் பெற்ற பண்பில் சிறந்த பிள்ளைகள். மனத்திற்கினிய அன்புமிக்க அப்பிள்ளைகளுக்கு விளக்கினைப் போன்றது கல்வி. அக்கல்விக்கு விளக்காக விளங்குவது எதுவென்றால், அவர்களிடம் உள்ள நல்லெண்ணங்களே.